**செய்தி வெளியீடு எண்:128** **நாள் :26.02.2016**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் 23.2.2016 அன்று தலைமைச் செயலகத்தில், அரசு தலைமை வழக்கறிஞர் திரு.ஏ.எல். சோமயாஜி அவர்கள், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு உச்சநீதிமன்ற நீதியரசர்கள், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள், நீதித்துறை அலுவலர்கள், சென்னை உயர்நீதிமன்ற பணியாளர்கள் மற்றும் மாவட்ட நீதி நிர்வாகப் பணியாளர்கள் சார்பில் அளிக்கப்பட்ட தொகையான 1 கோடியே 18 லட்சத்து 7 ஆயிரத்து 498 ரூபாய், தலைமை ஆட்சியாளர் மற்றும் பொதுநிலை பொறுப்புரிமையர் (Administrator General and Official Trustee) சார்பில் அளிக்கப்பட்ட தொகையான 10 லட்சம் ரூபாய், என மொத்தம் 1 கோடியே 28 லட்சத்து 7 ஆயிரத்து 498 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 373 கோடியே 32 லட்சத்து 10 ஆயிரத்து 875 ரூபாயாகும்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**
**நாள்: 26.2.2016**